மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 58/2019

பெயர் – முத்துச்சாமி (வா.சா.2)

நாள் – 01.09.2023

3,4 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

இந்த வழக்கின் வாதி ஜெகதீஷ் எனக்கு என்ன உறவு என்றால் பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். வாதியை எனக்கு எவ்வளவு காலமாக தெரியும் என்றால் 30 ஆண்டு காலமாக தெரியும். நான் எந்த ஊரில் ஆசிரியராக பணிபுந்து வருகிறேன் என்றால் ஓ.மேட்டுபட்டியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு எங்கு பணிபுரிந்தேன் என்றால் உப்பத்தூரில் வேலை பார்த்தேன். ஓ.மேட்டுபட்டியில் 10 ஆண்டு வேலை பார்த்து வருகிறேன். வழக்கு சொத்துக்கான சர்வே எண் மற்றும் பட்டா எண் என்ன என்றால் சரியாக ஞாபகம் இல்ல. தாவா சொத்து முதலில் யாருக்கு பாத்தியப்பட்டு இருந்தது என்றால் திருப்பதியின் தகப்பனார் சங்கரப்பநாயக்கருக்கு பாத்தியப்பட்டு இருந்தது. சங்கரப்பநாயக்கரின் மனைவி பெயர் என்ன என்றால் கிருஷ்ணவேணி. சங்கரப்பநாயக்கரின் மனைவி பெயர் கிருஷ்ணவேணி என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சங்கரப்பநாயக்கரின் வாரிசுகள் யார் என்றால் திருப்பதி மற்றும் கிருஷ்ணவேணி ஆவார்கள். சங்கரப்பநாயக்கர் எப்போது இறந்தார் என்றால் 1975ம் ஆண்டு இறந்தார். சங்கரப்பநாயக்கரின் மனைவி எப்போது இறந்தார் என்றால் தெரியாது. தாவா சொத்து வாதிக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் திருப்பதியின் அப்பா வழியில் பரம்பரையாக வந்த சொத்தாகும். தாவா சொத்து திருப்பதியின் அப்பா வழியில் பரம்பரையாக வந்த சொத்து எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். திருப்பதியின் மனைவி பெயர் என்ன என்றால் சங்கரேஸ்வரி ஆகும். சங்கரேஸ்வரிக்கும் தாவா சொத்து பரம்பரையாக வந்த சொத்து என்றால் சரியல்ல. சங்கரேஸ்வரியின் கணவருக்கு பரம்பரையாக வந்த சொத்து ஆகும். 1,2 பிரதிவாதிகள் யார் என்றால் சந்திரபோஸ், சந்திரசேகர் ஆவார்கள். சந்திரபோஸ், சந்திரசேகர் ஆகியோர்கள் தான் 1,2 பிரதிவாதிகள் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மோசடியாக யார் சொத்து பதிவு செய்யப்பட்டது என்றால் திருப்பதியின் மனைவி சங்கரேஸ்வரிக்கு திருப்பதியின்

அம்மா தானசெட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார். அந்த மோசடி ஆவணம் எப்போது உருவாக்கப்பட்டது என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நிரூபண வாக்குமூலத்தை எப்போது தாக்கல் செய்தேன் என்றால் போன மாதம் தாக்கல் செய்தேன். வழக்கு தபசில் சொத்து பற்றிய எந்த முழுமையான விவரமும் எனக்கு தெரியாது அதனால் தான் எனது நிரூபண உறுதிக்கூற்றிலும் குறுக்குவிசாரணையிலும் முன்னுக்குபின்முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3,4 பிரதிவாதிகள் அவர்களது கடமைகளை சரிவர செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வாதி எனகது பக்கத்து வீட்டுகாரர் மற்றும் நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.